## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வருகை:

# வேளச்சேரி கிழக்குப் பகுதிக் கழக அவசர ஆலோசனைக் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் துரை கபிலன் வேண்டுகோள்!

சென்னை, பிப்.9-

வேளச்சேரி கிழக்குப் பகுதிக் கழகத்தினருக்கு பகுதிக் கழகச் செயலாளர் துரைகபிலன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

வேளச்சேரி கிழக்குப் பகுதிக் கழக நிர்வாகிகள் அவசர கலந்தாய்வு ஆலோசனைக் கூட்டம் பகுதிக் கழக அவைத் தலைவர் அருணா வேலாயுதம் தலைமையில் எனது (பகுதிக் கழகச் செயலாளர் துரைகபிலன்) முன்னிலையில் இன்று (09.02.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணியளவில் திருவான்மியூர் சித்திரை குளம் வீதியில் உள்ள மகாலட்சுமி திருமண மண்டபத்தில் (இந்தியன் வங்கி கிளை அருகில்) நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் வருகின்ற 15.02.2025 அன்று திருவான்மியூர் ராமசந்திரா கன்வென்சன் திருமண மண்டபத்தில் சென்னை தெற்கு மாவட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் இளம் தலைவர் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வருகையை முன்னிட்டும் கழக ஆக்கப்பணிகள் குறித்தும் அவசர கலந்தாய்வு ஆலோசனை கூட்டம் நடைபெற இருக்கிறது.

இதில் வேளச்சேரி கிழக்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், இளைஞர் அணி துணை அமைப்பாளர், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அனைத்து அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள், தவறாமல் கலந்தாய்வு கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் .

இவ்வாறு வேளச்சேரி கிழக்கு பகுதி கழக செயலாளர் துரை கபிலன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# மதுரவாயல் வடக்குப் பகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் வேண்டுகோள்!

சென்னை பிப்.9-

மதுரவாயல் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது. இது குறித்து பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே. ராஜன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு;

கழக தலைவர் தமிழக முதல்வர் மற்றும் துணை முதல்வர் சின்னவர் ஆகியோரின் ஆணைக்கு இணங்கவும், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆலோசனையின் பேரில் ,சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் கூட்டம் (இன்று 9.2.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணி அளவில் நொளம்பூரில் உள்ள பகுதி கழக அலுவலகத்தில் பகுதி கழக நிர்வாகிகள் ஆ. மாலினி, ஆர்.கர்ணல், தீ. பாலாஜி எம்.ஏ.செந்தில் சுரேஷ் ம.உதயகுமார் ஆகியோர் முன்னிலையில் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மதுரவாயல் வடக்கு பகுதி கழகத்திற்கு உட்பட்ட,வட்ட கழக செயலாளர்கள்,பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு பகுதி செயலாளர் நொளம்பூர் வே. ராஜன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.




## செஞ்சி ஒன்றியம்

# அனந்தபுரம் கழக முன்னோடி வி.சேதுராமன் மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி! இன்று இறுதிச் சடங்குகள்!



செஞ்சி, பிப்.9-

விழுப்புரம் மாவட்டம் - செஞ்சி ஒன்றியம் - அனந்தபுரம் பேரூராட்சியைச் சேர்ந்த கழக மூத்த முன்னோடி வி.சேதுராமன் அவர்கள், நேற்று திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டு இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு வயது 71.

இளம் பிராயம் தொட்டு கழகத்தின் உறுப்பினரான அவர், கழகத்தின் மீது தீவிர கொள்கைப் பற்றுமிக்கவராக விளங்கியவர், கழகம் நடத்தும் பொதுக்கூட்டங்கள், போராட்டங்களில் எல்லாம் பங்கேற்றவர், கொண்ட கொள்கையில் இருந்து கிஞ்சிற்றும் வழுவிடாதவராக விளங்கியவர், சேதுராமன் செட்டியார் அவர்கள்.

கழகப் போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றுள்ளார்.

பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் மீது பக்தியும், கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மீது மிகுந்த பாசமும் கொண்டவர் அவர்.

அவர் வாழ்ந்த பகுதியில் இளைஞர்கள் பலரை கழகத்தில் ஈடுபாட்டுடன் பணியாற்றும் வண்ணம் ஒரு தூண்டுகோலாக விளங்கியவர். அவரது மறைவு அனந்தபுரம் வட்டார கழகத்திற்கு பேரிழப்பு எனின் அது மிகையல்ல.

மறைந்த கழக முன்னோடி சேதுராமன் அவர்களுக்கு மனைவியும், 3 மகன்களும், ஒரு மகளும், 4 பேரன்களும் உள்ளார்கள். சேதுராமனின் புதல்வர்களில் ஒருவரான மகேஷ்குமார், ‘முரசொலி’ கணிப்பொறிப்பிரிவில் பணிபுரிந்தவராவார்.

சேதுராமன் அவர்களின் மறைவறிந்து கழகத்தினர் பலரும் அன்னாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர். அவரது இறுதி ஊர்வலம் இன்று (9.2.2025- ஞாயிற்றுக்கிழமை) மாலை 4 மணியளவில் எண்.6, ஈஸ்வரன் கோவில் தெரு, அனந்தபுரம், செஞ்சி எனும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு இறுதிச் சடங்குகள் நடைபெறுகின்றன.

## ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ. - க.தனசேகரன் எம்.சி. - மு.ராசா எம்.சி. முன்னிலை!

# கலைஞர் நகர் 129 (அ) வட்டக் கழக நிர்வாகிகள் - பாக முகவர்கள் கூட்டம்!

### வட்டச் செயலாளர் தஞ்சை ஆர்.பாபு வேண்டுகோள்! வே.உமாகாந்த் ஆய்வு!

சென்னை, பிப். 9

கலைஞர் நகர் வடக்குப் பகுதி, 129 (அ) வட்டக் கழகச் செயலாளர் தஞ்சை ஆர். பாபு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் வடக்குப் பகுதி, 129 (அ) வது வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர் கள் ஆய்வுக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிர மணியன் ஆலோசனைப்படி, இன்று (09.02.2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில், காவிரி தெரு ஐஸ் நிறுவனத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் 129 (அ) வது வட்டக் கழகச் செயலாளர் தஞ்சை பாபு தலைமை வகிக்கிறார்.

கூட்டத்தில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர், பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கு மற்றும் தணிக்கைக் குழுத் தலைவர் க.தனசேகரன் எம்.சி, கலைஞர் நகர் வடக்குப் பகுதிக் கழகச் செயலாளர் மு.ராசா எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

விருகம்பாக்கம் தொகுதிப் பார்வையாளர் வே. உமாகாந்த் ஆய்வு மேற்கொள்கிறார்.

இக்கூட்டத்திற்கு பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் திரளாக கலந்து கொள்ளுமாறு வட்டக் கழகச் செயலாளர் தஞ்சை ஆர்.பாபு கேட்டுக் கொண்டுள்ளார்.

## வே. உமாகாந்த் பங்கேற்பு!

# 138வது வட்ட பாக உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### வட்டச் செயலாளர் சோ.செந்தில் குமார் வேண்டுகோள்!

சென்னை பிப்.9-

இதுகுறித்து வட்ட கழகச் செயலாளர் சோ.செந்தில்குமார் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு;

138 வது வட்ட கழக பாக உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (9.2.2025 ஞாயிறு) காலை 9 மணியளவில் நமது வட்டத்தின் பாக உறுப்பினர்கள் ஆலோசனைக்கூட்டம் எம்.ஜி.ஆர் நகர் அண்ணா மெயின் ரோட்டில் உள்ள பகுதிக்கழக அலுவலகத்தில் வட்ட கழக செயலாளர் சோ.செந்தில்குமார் என்னது தலைமையிலும் பகுதி செயலாளர் கே.கண்ணன் முன்னிலையில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர் வே.உமாகாந்த் ஆய்வு செய்ய உள்ளார்.கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா ஆகியோர் ஆலோசனை வழங்க உள்ளதால் பாக தலைவர்கள் தங்கள் பாக உறுப்பினர்களை கட்டாயம் அழைத்து வருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்ட கழக செயலாளர் சோ.செந்தில் குமார் தெரிவித்தனர்.

# பணியாளர்களின் நலனுக்கான சிறப்பு மருத்துவ முகாம்!

### சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது!

சென்னை,பிப்.9

ரோட்டரி கிளப் ஆஃப் அண்ணா நகர் மெட்ராஸ், அப்பல்லோ சிறப்பு மருத்துவமனைகள், வானகரம் மற்றும் மாதவ் நீரிழிவு மையம், அண்ணா நகர் இணைந்து, சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் பணியாளர்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக உடல் நலம் மற்றும் ஆரோக்கிய சிறப்பு மருத்துவ முகாம் 7.2.2025 அன்று நடைபெற்றது.

இம்முகாமில், இருதய நோய், சர்க்கரை நோய், மகளிர் மருத்துவ பரிசோதனைகள் நடைப்பெற்றது. மேலும், எலும்பியல் துறைகளில் சிறப்பு ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

இம்முகாமில், ரோட்டரி கிளப் ஆஃப் அண்ணாநகர் மெட்ராஸ் தலைவர் அரவிந்தன் ஸ்ரீராமுலு, தலைமை விருந்தினர் Rtn. என்.எஸ். சரவணன், ஆளுநர், ரோட்டரி மாவட்டம் 3234, ரோட்டரி சங்கங்கள் மூலம் தொடங்கப்பட்ட பல்வேறு சமூக நலத் திட்டங்களை எடுத்துரைத்தனர்.

சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர். டி.ஜி. வினய், கௌரவ விருந்தினராக சிறப்பித்து ஒவ்வொரு பணியாளரின் நல்வாழ்வின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார், டாக்டர்.ஹரிகிருஷ்ணன் பார்த்தசாரதி - மூத்த இருதய நோய் நிபுணர் & TAVI ஸ்பெஷலிஸ்ட் அப்பல்லோ சிறப்பு மருத்துவமனை வானகரம், இதுபோன்ற முகாம்களின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தினார். மாதவ் நீரிழிவு மையத்தின் CEO Rtn. விருந்தா தீபக், நீரிழிவு நோய் கட்டுப்பாட்டின் அவசரத் தேவையை தெளிவாக விளக்கினார்.

# ஒழுங்கு நடவடிக்கை

### தலைமைக் கழக அறிவிப்பு

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி நகரச் செயலாளர் எஸ்.கே.நவாப், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**“அண்ணா அறிவாலயம்”** **துரைமுருகன்**
சென்னை- 600 018. பொதுச்செயலாளர்,
நாள்: 08.02.2025. தி.மு.க.

## கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம்

# கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு ஆகிய நகரங்களில் அடங்கியுள்ள வார்டுகள் மற்றும் ஊராட்சி கிளைகள் விவரம் மற்றும் நகரக் கழக பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி நகரம், **கிருஷ்ணகிரி கிழக்கு**, **கிருஷ்ணகிரி மேற்கு** ஆகிய 2 நகரக் கழகங்களாகப் பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட நகரங்களுக்கு கழகப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

மேற்சொன்னவாறு பிரிக்கப்பட்ட **கிருஷ்ணகிரி கிழக்கு**, **கிருஷ்ணகிரி மேற்கு** ஆகிய நகரங்கள் பின்வரும் வார்டுகள் மற்றும் ஊராட்சி கிளைகள் கொண்டதாக அமையும்.

**கிருஷ்ணகிரி கிழக்கு நகரம்:** 1.பாரதியார் நகர், 2.திருவள்ளுவர் நகர், 3. தேவசமுத்திரம், 4.நாராயணன் கொட்டாய், 5.பூசாரி கொட்டாய், 6.மாரப்பன் கொட்டாய், 7.அய்யர் கொட்டாய், 8.பொன்மலைகுட்டை, 9.ஜெ.ஜெ.நகர், 10. பெரியார் நகர், 11.ஜக்கப்பன் கொட்டாய், 12.காந்தி நகர் ஆகிய 12 ஊராட்சி கிளைகள் மற்றும் 17வது வார்டு முதல் 33வது வார்டு வரையிலான 17 வார்டுகள்.

**கிருஷ்ணகிரி மேற்கு நகரம்:** 1.கட்டிக்கானப்பள்ளி, 2.மேல்புதூர், 3.கீழ்புதூர், 4.செல்லாண்டி நகர், 5.புதிய வீட்டு வசதி வாரியம்2, 6.புதிய வீட்டு வசதி வாரியம்1, 7.வினாயகர் கோவில் நகர், 8.சத்யசாய் நகர், 9.வஹாப் நகர், 10.வஹாப்நகர் கிழக்கு, 11.பெருமாள் நகர், 12.ராஜாஜி நகர் ஆகிய 12 ஊராட்சி கிளைகள் மற்றும் 1வது வார்டு முதல் 16வது வார்டு வரையிலான 16 வார்டுகள்.

**நகரக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு** ஆகிய நகரங்களில் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, நகரக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கிருஷ்ணகிரி கிழக்கு நகரம்**

பொறுப்பாளர் : எம். வேலுமணி, 43பி, சீனிவாச காலனி, புதுப்பேட்டை, கிருஷ்ணகிரி.

**கிருஷ்ணகிரி மேற்கு நகரம்**

பொறுப்பாளர் : என். அஸ்லாம் ரகுமான் ஷரிப், 15/5, விநாயகர் தெரு, ராசு வீதி, கிருஷ்ணகிரி 635 001.

“அண்ணா அறிவாலயம்” **துரைமுருகன்**
சென்னை 18. பொதுச்செயலாளர்,
நாள் : 08.02.2025. தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காளி வி.எஸ்.வாசன்

**பிப்ரவரி 9 (2007)**



**மயிலாடுதுறை வட்டக் கழகத்தின் முதல் துணைச் செயலாளராகவும், நீண்டகாலம் காளி ஊராட்சி மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்பு அறப்போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த பெரும்பாலான போராட்டங்களில் கலந்துகொண்டு சுமார் பத்தொன்பது முறை சிறை சென்றவர்.**

**முரசொலி, நம்நாடு ஆகிய நாளிதழ்களில் சில ஆண்டுகள் சுருக்கெழுத்தராகவும் செய்தியாளராகவும் பணியாற்றியவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா.சு. தங்கராசன்

**பிப்ரவரி 9 (1985)**



**இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்ற தொடங்கி, உசிலம்பட்டி வட்டக் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், நீண்டகாலம் தொடர்ந்து சேடபட்டி ஒன்றியக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைத் தலைவர், உசிலம்பட்டி நிலவள வங்கி தலைவர் பொறுப்பு வகித்தவர்.**

**இந்தித் திணிப்பு, சட்டநகல் எரிப்பு, மிசா எதிர்ப்பு, கருப்புக் கொடி உள்ளிட்ட கழகம் அறிவித்த பெரும்பாலான போராட்டங்களில் கலந்துகொண்டு பல முறை சிறை சென்றவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.